# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2017.01.02

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2017**

பல்கலைக்கழக துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## கணக்காளர் / நிதிப் பொறுப்பாளர் / உள்ளக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை

2011.11.15 ஆம் திகதிய 971 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள கணக்காளர் / நிதிப் பொறுப்பாளர் / உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. துணை வேந்தர்களின் மற்றும் பணிப்பாளர்களின் குழுவினால் (CVCD) மேலதிக தகைமைகளை உட்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட பிரேரணையை கவனத்திற் கொண்டு கணக்காளர் / நிதிப் பொறுப்பாளர் / உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை **இணைப்பு I** இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு 2016.11.17 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 953 ஆவது கூட்டத்தொடரின்போது தீர்மானிக்கப்பட்டது.

03. திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை 2017.01.02 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

04. அதற்கமைய, 2011.11.15 ஆம் திகதிய 971 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காளர் / நிதிப் பொறுப்பாளர் / உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை 2017.01.02 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது.

05. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.

12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/210

| பதவிப் பெயர் | ஆட்சேர்ப்பு முறை | தகைமைகள் |
|---|---|---|
| கணக்காளர் / நிதிப் பொறுப்பாளர் / உள்ளகக் கணக்காய்வாளர்<br>**சம்பளக் குறியீடு**<br>U-EX3 (II) | பொது அறிவித்தல் ஒன்றின் ஊடாக<br><br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்படுவர்<br><br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதனிலும் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்வதற்காக கவனத்திற்கொள்ளப்படுவார்கள். | 1.(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) அல்லது அதற்கு சமமான நிறுவனமொன்றின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்;<br><br>**அத்துடன்**<br><br>(ஆ) மேலே 1.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பெற்றதன் பின்னர் குறைந்தது ஆறு (06) வருட காலம் கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு தொடர்பான நிறைவேற்று மட்டத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>2. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவனமொன்றில் பிரதிக் கணக்காளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்;<br><br>• அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், அப் பதவியில் மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்; அதில் ஒரு (01) வருட காலம் மேலே 1.(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பெற்றதன் பின்னராக இருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>3. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவனமொன்றில் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்;<br><br>• அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் |

| | | |
|---|---|---|
| | | கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு தொடர்பான நிறைவேற்று மட்டப் பதவியில் பத்து (10) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.;<br><br>• மேலே குறிப்பிடப்பட்டுள்ள பத்து (10) வருட கால சேவைக் காலத்தில் குறைந்தது எட்டு (08) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தை பல்கலைக்கழக முறைமையில் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகித்திருத்தல் வேண்டும்;<br><br>• மேலே எட்டு (08) வருட கால அனுபவத்தில் மூன்று (03) வருட காலம் மேலே 1. (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைப் பெற்றதன் பின்னரானதாக இருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>4. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவனமொன்றில் பிரதிக் கணக்காளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்;<br><br>• அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்;<br><br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) இடைநிலைப் பகுதித் தகைமை அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருத்தல்;<br><br>• அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து கணக்கியல் / நிதி / முகாமைத்துவம்* சம்பந்தமான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்;<br><br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) இடைநிலைப் பகுதித் தகைமை அல்லது அதற்கு இணையான தகைமை அல்லது அதற்கு இணையான தகைமையை சிறப்பான வகையில் பூர்த்தி செய்ததன் பின்னர் கணக்கியல் மற்றும் /அல்லது கணக்காய்வு சம்பந்தமான நிறைவேற்று மட்டப் பதவியில் பன்னிரெண்டு (12) வருட கால அனுபவம்; |

| | | |
|---|---|---|
| | | • மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை அனுபவத்தில் பத்து (10) வருட சேவைக் காலத்தை பல்கலைக்கழக முறைமையில் சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகித்திருத்தல் வேண்டும்;<br><br>**அல்லது**<br><br>5. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவனமொன்றில் பிரதிக் கணக்காளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்;<br><br>• அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தலுடன் பதவியில் மூன்று (03) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்;<br><br>• அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து முதனிலைப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்;<br><br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) இடைநிலைப் பகுதித் தகைமை அல்லது அதற்கு சமமான தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.<br><br>**அல்லது**<br><br>• இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் ( SLIATE) அல்லது அதன் முன்னைய(முன்னோடி) நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA);<br><br>• மேற் குறிப்பிடப்பட்ட இடைநிலைப் பகுதித் தகைமை / கணக்கியல் சம்பந்தமான டிப்ளோமா (HNDA) சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு சம்பந்தமான நிறைவேற்று மட்டப் பதவியில் பன்னிரெண்டு (14) வருட கால அனுபவம்;<br><br>• மேற்குறிப்பிடப்பட்ட அனுபவத்தில் குறைந்தது ஐந்து |

| | | |
|---|---|---|
| | | (05) வருடங்கள் U-EX 2(I) எனும் சம்பளக் குறியீட்டின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டுள்ள பல்கலைக்கழக முறைமையில் பிரதிக் கணக்காளர் /பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியில் மற்றும் /அல்லது சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகித்திருத்தல் வேண்டும்;<br><br>**அல்லது**<br><br>6. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் / உயர் கல்வி நிறுவகமொன்றில் / நிறுவனமொன்றில் பிரதிக் கணக்காளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்;<br><br>• அப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்;<br><br>• அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட முதனிலைப் பட்டம்;<br><br>அல்லது<br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) இடைநிலைப் பகுதித் தகைமை அல்லது அதற்கு சமமான தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br>• இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் ( SLIATE) அல்லது அதன் முன்னைய(முன்னோடி) நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA);<br><br>• பல்கலைக்கழக முறைமையில் கணக்கியல் மற்றும் /அல்லது கணக்காய்வு சம்பந்தமாக பதினெட்டு வருடத்திலும் குறையாத (18) வருட கால அனுபவம் இருத்தல்; |

| | | |
|---|---|---|
| | | • மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவை அனுபவத்தில் மூன்று (03) வருட சேவைக் காலத்தை பல்கலைக்கழக முறைமையில் பிரதிக் கணக்காளர் / பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதிப் பொறுப்பாளர் பதவியை வகித்திருத்தல் வேண்டும்;.<br><br>**அல்லது**<br><br>7. கீழ் குறிப்பிடப்படும் விடயங்களுடன் இலங்கை கணக்காளர் சேவையின் கணக்காளர் II தரப் பதவியை வகித்தல்;<br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CASL) அல்லது அதற்கு சமமான நிறுவனமொன்றில் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்;<br><br>அல்லது<br><br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து / உயர் கல்வி நிறுவகமொன்றிலிருந்து கணக்கியல் / நிதி / முகாமைத்துவம்* சம்பந்தமான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்;<br><br>குறிப்பு : **‘கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு’** அனுபவம் என்பது அரசாங்கத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வில் நிறைவேற்று மட்டத்தில் பெற்றுக்கொண்ட அனுபவமாகும்.<br><br>* ‘முகாமைத்துவம்’ எனும் பதத்திலிருந்து கணக்கியல் மற்றும் நிதி எனும் பிரதான கூறுகளுடன் முகாமைத்துவம் / அரச நிர்வாகம்/ வணிக நிர்வாகம் சம்பந்தமான பட்டமே கருத்திற் கொள்ளப்படுகின்றது. |